# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**<u>ஆணை நாள் - 03.06.2025</u>**

**<u>முன்னிலை</u>**

## திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**<u>வழக்கு எண். SA 5957/SCIC/2023</u>**

திரு.P.V.ஜெயராமன் மேல்முறையீட்டாளர்
எண்.18/9, மேலநடுத் தெரு
மண்ணச்சநல்லூர்,
திருச்சிராப்பள்ளி - 621 005.

//எதிர்//

1.பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்)
மாவட்டப் பதிவாளர் அலுவலகம் ....... பொதுஅதிகார அமைப்பு
திருச்சி
2.பொதுத் தகவல் அலுவலர்/
கண்காணிப்பாளர் "U" பிரிவு
பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்,
சென்னை-28
3.பொதுத் தகவல் அலுவலர்/
கண்காணிப்பாளர் "C" பிரிவு
பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்
சென்னை-28.

**<u>ஆணை</u>**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 20.10.2022 |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 17.11.2022 |
| 3. | மனுதாரரின் மனு பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றம் | 18.11.2022 |

| | | |
|---|---|---|
| 4. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 25.11.2022 |
| 5. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 26.12.2022 |
| 6. | இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 29.03.2023 |
| 7 | ஆணையத்தின் அறிவிப்பு | 16.06.2023 |
| 8. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 09.01.2025 |
| 9. | மனுதாரரின் ஆட்சேபணை மனு | 07.02.2025 |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / தமிழ்நாடு பத்திரப் பதிவுத்துறை தலைமை அலுவலகம், சென்னை-28 அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், "தங்களது அலுவலகத்துக்கு நான் 27/09/2021 தேதியிட்ட கடிதம் மூலம் போலி ஆவணப் பதிவை ரத்து செய்ய வேண்டி 6 கடித நகல் இணைத்து பதிவு தபால் மூலம் புகார் மனு தங்களது தலைமை அலுவலகத்துக்கு அனுப்பி இருந்தேன். அதன் மீது நடவடிக்கையின் விபரத்தை தகவல் பெறும் உரிமைச் சட்டம்-2005-ன் கீழ் தகவல் தர வேண்டுகிறேன்" என்பன போன்று 3 (மூன்று) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

**2. இன்றைய (03/06/2025) விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. எனினும், மனுதாரர் 26/05/2025 தேதியிட்டு ஆணையத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில், தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால், மருத்துவமனையில் தொடர் சிகிச்சை பெற்று வருவதாலும் நேரடி விசாரணையில் கலந்து கொள்ள இயலவில்லை என்றும் எனவே நேரில் ஆஜராவதில் இருந்து தனக்கு விலக்கு அளிக்குமாறும் கோரியுள்ளார். பொது அதிகார அமைப்பின் சார்பில், திரு.ஸ்ரீராம், கண்காணிப்பாளர் "C" பிரிவு, திருமதி G. புஷ்பலதா, கண்காணிப்பாளர் "U" பிரிவு மற்றும் பொதுத் தகவல் அலுவலரால் அங்கீகரிக்கப்பட்ட பிரிநிதி பெ.சரத்குமார், உதவியாளர், மாவட்டப் பதிவாளர் அலுவலகம், திருச்சி ஆகியோர் ஆஜரானார்கள்.**

**3. பொதுத் தகவல் அலுவலர் / "U" பிரிவு கண்காணிப்பாளர் தெரிவிக்கையில், 17/11/2022, 26/12/2022, 03/01/2023 மற்றும் 09/01/2025 தேதிகளிட்ட கடிதங்களின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்ததோடு, மாவட்டப் பதிவாளர், திருச்சி அவர்கள் 07/08/2023 தேதியிட்டு ஆணை பிறப்பித்திருந்ததை மனுதாரருக்கு அனுப்பியுள்ளதாகவும் தெரிவித்தார். மீண்டும் 27/05/2025 மனுதாரருக்கு இனவாரியான தகவல்களையும், மேற்குறிப்பிட்ட மாவட்டப் பதிவாளரின் 07/08/2023 தேதியிட்ட அறிக்கை ஆகியவற்றை இணைத்து அனுப்பியுள்ளதாகத் தெரிவித்து, அதன் நகல்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மேற்குறிப்பிட்ட தகவல்களை உள்ளடக்கிய கடிதம் மனுதாரரை சென்றடைந்ததற்கான அஞ்சல் கண்காணிப்பு சான்றின் நகலை பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.**

**4. ஆணையத்தின் அழைப்பாணை அனுப்பப்பட்டு, ஆணையத்தின் நேரடி விசாரணையில் பங்கேற்று தனது வாதுரையினை பதிவு செய்ய வாய்ப்பளிக்கப்பட்டும், இன்றைய விசாரணையில் மனுதாரர் ஆஜராகவில்லை. மேலும் பொதுத் தகவல் அலுவலர் / "C" பிரிவு கண்காணிப்பாளர், தெரிவிக்கையில் மனுதாரர்**

**குறிப்பிட்டிருந்தவாறான 27/09/2021 தேதியிட்ட மனு, பதிவுத்துறைத் தலைவர் அலுவலகத்திற்கு கிடைக்கப் பெறவில்லை என்றும் அதன் விவரம் குறித்து மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் கூறினார். பொது அதிகார அமைப்பின் அலுவலக ஆவணங்களின்படி ஏற்கனவே தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**
**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 5957/SCIC/2023</u>**

**பெறுநர்**
**பொதுஅதிகார அமைப்பு**
1.பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்)
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
திருச்சி

2.பொதுத் தகவல் அலுவலர்/
கண்காணிப்பாளர் “U” பிரிவு
பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்,
சென்னை-28

3.பொதுத் தகவல் அலுவலர்/
கண்காணிப்பாளர் “C” பிரிவு
பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்
சென்னை-28.

**மேல்முறையீட்டாளர்**
திரு.P.V.ஜெயராமன்
எண்.18/9, மேலநடுத் தெரு
மண்ணச்சநல்லூர்,
திருச்சிராப்பள்ளி - 621 005

RG/PC